# பக்தகவிஅன்னமாச்சார்யார்

திருவேங்கடவனின் பெருமையை சுந்தரத் தெலுங்கிலே பாடிய சிறப்பு அன்னமாச்சார்யார் ஒருவரையே சாரும், அவர் பதினைந்தாம் நூற் றூண்டைச் சார்ந்த ஒப்பற்ற முதல் பக்தகவியாவார், ஆந்திரா மாநில கடப்பை ஜில்லா ராஜம்பேட்டை தாலுகாவில் இருக்கும் குக்கிராமமான தாள்ளபா கத்தைச் சேர்ந்தவர், அவருடைய மூதாதையர், பத்தாம் நூற்றாண்டிலே வடகாசி யிலிருந்து குடிபெயர்ந்து வந்த அந்தணர் குலத்தவர். பரத் வாஜகோத்திரத்தைத் தழுவியவர்கள். ஆந்தி ராவின் நந்தவரம் எனும் நாட்டை ஆண்ட நந்தன் என்னும் மன்னன் காசிக்கு யாத்திரையாக சென் றிருந்த போது, தற்செயலாக வைதிக தருமத் திலே தேர்ந்திருந்த இவர்களை சந்தித்ததுமே தம்மோடு ஊருக்குத் திரும்பும்படியாக வேண் டினார். அனைத்து வசதிகளையும் செய்து முழுமை யாக ஆதரிப்பதாகவும் அறுதியிட்டார். அன்புடன் அழைத்த மன்னனுடன் கூடவந்து புதியதொரு சூழ்நிலையிலே வாழ்க்கையைத் தொடங்கினர், ஏனவேதான் மன்னனின் பெயரிலேயே நந்த வைதிக பிராமணர் என்று அழைக்கப்பட்டனர். மேலும், சிவனையும் விஷ்ணுவையும் வேறு பாடின்றி வணங்கி வந்த ஸ்மார்த்தர்கள் சாமுண் டீஸ்வரியின் உபாசகர்களாகவும் விளங்கினர்.

நாராயணஸூரி லக்கம்மா எனும் புண்ணிய தம்பதிகளுக்குப் பிறந்தவர் அன்னமய்யா. குழ ந்தைப்பேறு வேண்டி பெற்றோர் திருமலைக்கு யாத்திரையாகப் புறப்பபட்டனர். திருவேங்கட வனை தரிசித்து ஆலயத்தைச் சுற்றி வலம் வந்தனர். அப்போது பகவானின் திவ்யாயுதமான கட்கம், நந்தகம் எனும் துாய கத்தி யானது அவர்களுடைய மனக்கண்ணிலே தெரிந்தது. உடனே இவருவரும் இவ்வரிய நிகழ்ச்சியை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டனர். கிராமத்திற்குத் திரும்பியதுமே லக்க மாம்பா கர்ப்பவதியானாள் காலம் கனிந்ததும் வேங்கடவனின் திருவருளாலே நந்தகாம்சம் பொரு ந்தியதொரு தெய்வமகன் 09.05.1408 ஆம் ஆண் டிலே பிறந்தான் தவப்புதல்வனாகப் பிறந்த அந்த குழந்தைக்கு அன்னமய்யா என்று பெயரிட்டனர். இந்த பெயரைச் சூட்டக் காரணமும் அன்னம் திருமாலையே குறிப்பதாகும்.

வேங்கடேச கதைகளைக் கேட்ட வண்ணமே அன்னையிடம் உணவருந்தினான். பிள்ளை பிராயத்திலே பள்ளிக்குச் செல்லாமலேயே கல்விச் செல்வம் வந்தடைந்தது. காரணப்பிறவியான அன்னமய்யாவிற்கு கைக்குழந்தை பருவத்திலேயே வேங்கடவனின்மீதான பக்தியானது தாய்ப்பாலிலே தரப்பட்டது மாடுகளுக்கு தேவையான புல்லை அறுத்து வரும்படி மகனை வயல்காட்டிற்கு அனுப்பினர். தாளாதுயரத்திலே தர்ப்பையை த்துண்டிக்கும் போது அறியாமல் அரிவாலானது அன்னமய்யாவின் விரல்களிலே பட்டு ரத்தம் சொட்ட ஆரம்பித்தது. அப்போது உற்றார் உறவினர் அனைவருமே நிரந்தரமல்ல என்ற

கோயில் உண்டியல் எதிரே ஒரு சிறியதான கிடநுகை ஏற்படுத்தி அதிலே பத்திரப்படுத்தினர். பல நூற்றூண்டுகளும் அன்னமய்யாவின் சநுகீர்த் தனநிதி முடநுகியே கிடந்தது. தற்செயலாகத் திறந்து பார்த்த போது. சில செப்பபேடுகளை உருக்கி பாத்திரநுகளாக மாற்றியிருப்பது துரதிருஷ் டவசமாகும். அன்னமய்யா இயற்றிய 32000 கீர்த்த னைகளிலே நமக்குக்கிட்டியது 12000 மாத்திர மேயாகும். மீதி 20000 மும் பறிகொடுத்து விட் டோம்.சில செப்பேடுகள் அஹோபலத்திலும். திரு வரநுகத்திலும். தநுசை சரஸ்வதி மகாலிலும் இருந் தது தெரியவந்தது. செப்பேடுகள் இருந்த சேமிப்பு அறையைத் திறந்து பார்த்தபெருமை 1816 ஆம் ஆண்டைச் சேர்ந்த A.D. CAMBELL என்ற ஆநுகி லேயரைச் சாரும்.

பாண்டுரநுக விட்டலநாதனைப் போற்றிய கர்நாடக மாநிலத்தைச் சார்ந்த புரந்தரதாஸர் அன்னமய்யாவின் சமகாலத்தவர். சில கீர்த்த னைகளை இருவரும் சேர்ந்து எழுதியிருப்பது போலும் தெரியவருகிறது. அதுபோது அன்ன மய்யாவின் வயது மிகவும் முதிர்ந்துவிட்ட வேளையாகும். துல்லியமாகக் கணிக்கப்பட்ட அன்னமய்யா வரலாறு அவருடைய கடைசி காலத் தைப் பற்றிய சரியான விவரநுகளைக் குறிக் கவில்லை. 23.02.1503 ஆம் வருடம் பநுகுனி துவாதசி (க்ருஷ்ண பட்ஷம்) அன்று திருவேநு கடவனின் திருவடிகளை அலநுகரித்தார் என்பது தெரிய வருகிறது. அன்னமய்யா வாழ்ந்த சமார் 96 ஆண்டு காலமும் ஒரு ஞானயக்யமாக விளநுகியது எனலாம்.

விழிப்புணர்வு உண்டானது. வேநுகடவனின் இடுப் பை அலநுகரிக்கும் வாளின் அவதாரமல்லவா, கூரி ய கத்தியானது அன்னமய்யாவை உராய்ந்ததுமே பிறப்பின் நோக்கத்தை உணர்ந்து தெளிந்தார். இச்சம்பவம் நடந்ததுமே சொல்லி வைத்தார் போல பக்தர்களின் கோஷ்டியொன்று கோவிந்தா கோவிந்தா கோவிந்தா என்று கோ ஷமிட்டவண்ணம் திருமலையை நோக்கிச்செல் வதை அன்னமய்யா பார்த்தான். வேநுகடவனைக் காணவேண்டும் என்ற வேட்கை அவனுக்கு வெகுநாட்களாகவே இருந்து வந்தது. சந்தர்ப்பம் வரவே, மறுபரிசீலனையின்றி பெற்றோரிடமும் சொல்லாமல் வேநுகடமலைக்குச் செல்ல சித்தமானான். கூட்டமாகச் சென்ற யாத்திரிக ளுடன் கலந்து அன்னமய்யாவும் பத்திரமாகப் போனான். நெடுந்தொலைவில் இருக்கும் சேஷ மலை தென்பட்டதுமே அன்னமய்யாவின் மனம் பூரித்தது. அடிவாரத்திலிருந்து நடக்கத்தொ டநுகியதுமே பாலகனுககு சோர்வு உண்டானது. உடன் வந்தவரோ, கடகட வென்று மலையேறி விட்டனர். களைப்பாற அன்னமய்யா ஒரு மரத்தடி யிலே அயர்ந்து உறநுகினானன். யாருமில்லாத நேரம்பார்த்து லோகநாயகியான திருமகள் ஒரு மூதாட்டியாக கை நிறைய பிரசாதநுகளுடன் சிறுவனின் முன் தோன்றி தட்டி எழுப்பினாள். பசி மயக்கத்திலே விழித்த அன்னமய்யா யாரோ ஒரு பாட்டி உணவுடன் காத்திருப்பதைக் கண்டான். எழுந்து அம்மையாரை வணநுகி உணவைப்புசித்தான். உடனே புத்துணர்வு பெற்றான்,அவனுக்கோ இனமறியா இன்பம்

காரணமோ தெரியவில்லை. அது சாதரண உணவா என்ன, வேநுங்கடவனின் நைவேத்தியம் அல்லவா மீண்டும் மலையேற ஆரம்பித்ததுமே. தாயார் சாலக்கிராமமயமான திருமலையை காலணிகளோடு ஏறக்கூடாது என்று அன்னமய்யாவிற்கு அறிவுறுத்தினாள். அப்படியே செருப்புகளை உதறிய கணமே அரிதாகக்கிட்டும் விஷேஷ கடாட்சம் அன்னமய்யாவின் கண்களிலே ஜொலித்தது. அப்பொழுதே நூறு பாக்களைக்கொண்ட ஸ்ரீவேநுங்கடச்வரசதகத்தைப் பாடினான். திருமகளைப் போற்றும் வண்ணம் அமைந்த இச் செய்யுள்களின் முடிப்புமாத்திரம் வேநுங்கடேச்வரா முத்திரை பதிக்கப்பட்டது. உடனே. மனநுங்குளிர அருளிய பிராட்டி மறைந்தாள். அப்போதுதான் தான் கண்டது ஸ்ரீமகாலட்சுமி என அன்னமய்யா உணர்ந்தான். இச்சம்பவம் நமக்கு வைணவம் வலியுறுத்தும் புருஷகாரத்தை நினைவூட்டுகிறது. திருமகள் கேள்வனான பகவான், பக்தனுக்காக பரிந்துரைக்கும் பெரிய பிராட்டிக்கு செவிசாய்க்கிறான் என்பது பொருள்.

பேரானந்தத்திலே திளைத்த வாறே அன்னமய்யா திருமலை சிகரத்தை அடைந்தான். சுவாமி புஷ்கரிணி எனும் திருக்குளத்திலே நீராடினான். குளித்துஉடைகள் உலர்வதற்குள்ளாக நூறு பாடல்களை இயற்றியதாக வரலாறுகூறுகிறது. தூய ஆடைகளை அணிந்து முதலிலே ஸ்ரீ ஆதிவராக மூர்த்தியை அன்னமய்யா தரிசித்தான். பின்னர், திருமலையானின் சந்நிதியைஅடைந்த போது கோயில் கதவுகள் மூடியிருந்தன. அன்னமய்

ாள சிறையிலே தள்ளி சித்திரவதை செய்யும்படி ஆணையிட்டான். சிறியதொரு இருட்டறையிலே அன்னமய்யா வலிய சநுங்கிலிகளாலே கட்டப் பட்டார். பல உபாதைகளுக்கு ஆளானார். இக் கொடிய சம்பவத்திலிருந்து தம்மை மீட்கும் படியானதொரு உருக்ககமான கீர்த்தனையை வேநுங்கடவனுக்கு விண்ணப்பித்தார். வியப்புறும் வகையிலே பூட்டிய சநுங்கிலிகள் அறுந்து சிதறின. பதறிய காவலர்கள், செய்தியை உடனே அரசனுக்குத் தெரிவித்தனர். சநுங்கிலிகளை சரியாகக் கட்டத்தவறியதாலே வந்த வினை என்று கூறி மீண்டும் தானே வந்து அன்னமய்யாவை இறுகப்பிணைத்தான். மதித்து வந்த மன்னனே இப்படி போட்டு மிதிக்கிறானே என்று அன்னமய்யாவிற்கு துக்கம் தொண்டையை அடைத்தது, ஆனாலும் தளராமல் மறுபடியும் ஒரு சோகப்பாட்டைப் பாடினார். முன்பு சிதறிய சநுங்கிலிகள் இப்போது ஆவேசத்திலே தெறித்தன. அது பரமனின் சீற்றத்தை வெளிப் படுத்துவது போலத் தோன்றியது. தவறை உணர்ந்த அரசனின் சிரசு வெட்கத்திலே கூனிக்குறுகியது. அன்னமய்யாவின் கால்களிலே விழுந்து மன்னிக் கும்படி மன்றாடினான். இதுவும் பகவானின் திருவுள்ளமே எனக்கூறி அமைதியே உருவாக அன்னமய்யா சாளுவ நரசிம்மனிடமிருந்து விடைபெற்று திருமலைக்குப் புறப்பட்டார்.

பிற்கால சமூகம் பயனுறும் வண்ணம் ஓலைச் சுவடிகளிலே இருந்த அனைத்து கீர்த்தனைகளையுமே பணியாட்கள் நியமித்து செப்பத் தகடுகளிலே அவருடைய மகனும் பேரனும் அருகிலிருந்து கவனத்துடன் பொறித்தனர்.

தானத்திற்கு பெருமை சேர்க்கும்படி அரசன் கேட்டுக்கொண்டார். அன்னமய்யாவிற்கு முதலில் ஏதும் புரியவில்லை. பிறகு நன்றாக ஆராய்ந்து மன்னருடைய சகவாசம்.தாம் இயற்றிய கீர்த்தனை களை சமுதாயத்திலே பரப்ப மிகவும் உதவியாக இருக்கும் என்று எண்ணி அழைப்பை ஏற்றுக் கொண்டார். நாளும் சபையிலே பாடி அவை யோரை பக்திவெள்ளத்திலே மூழ்கடித்தார்.

அன்னமய்யாவின் ஆசியிலே, இறைசிந்தையிலே இருந்த சாளுவ நரசிம்மன் விஜயநகர சாம்ராஜ் ஜியத்தின் பேரரசனாக முடிசூட்டினார். அன்னமய் யாவின் மீதான அபிமானம் அரசனுக்குப் பெரு கியது. நாட்டை பொறுப்புடன் ஆளும் வேளை யிலே, செழிப்புற்ற அரசன் செருக்கும்கொண்டான். நிம்மதியை நாடுபவராக ஒரு நாள் காதல் மணம் வீசும்படியான கீர்த்தனையைப்பாடும்படி வேண் டினான். அன்னமய்யாவும் பாட, மன்னனின் மனம் கிளர்ச்சிக்கு உள்ளானது. உடனே, தான் மீதும் இப்படியொரு கீர்த்தனையைப் பாடச்சொன்னான். அரசனை மதித்து அவனுடன் கூடிசென்றது மிகப் பெரிய தவறென அன்னமய்யா நினைத்தார். தம் வாழ்க்கையே வேங்கடவனுக்கே அர்ப்பணி த்தாக்ககூறினார். இருந்தாலும், மீண்டும் மீண்டும் பாடும்படி வலியுறுத்தவே, வேதனையுற்ற அன்ன மய்யா, நரஹரியைப்பாடும் வாயால் ஒருபோதும் நரனைப்போற்றமாட்டேன் என்று திட்டவட்டமாக மறுத்தார்.

அவமானத்தைத் தாளாத அரசன், காவலாளிகளை அழைத்து அன்னமய்யாவை பாத யாவின் எதிர்பார்ப்புகள் சிதறின. உடனே உளமுருகப்பாடினான், பூட்டியகதவுகளும் தாமாகவே திறந்தன. கருவறையிலே உறையும் பரம்பொருளின் அழகிய திருமேனியைக் கண்டதுமே, அன்னமய்யாவின் மெய்சிலிர்த்தது. தன்னுடைய ஜனனமும் புனிதமடைந்தது என்று நினைத்தான். பகவானை வலம் வந்து தான் எடுத்து வந்த காணிக்கையைக் கவனமாக உண்டியலிலே சாற்றினான். பின் பிரசாதங்களும் சாப்பிட்டு விட்டு சற்றுஓய்வு எடுக்கச்சென்றான்.

மறுநாள் காலை மீண்டும் பகவானைத் தரிசித்தான், அது போது தான் இயற்றிய ஒரு புதிய பாடலை ஆலாபனை செய்தான், விந்தை ஆனால் உண்மை, பாடி முடிந்ததுமே பரமனினன் திருவாபரணம் ஒன்று நழுவி கீழே விழுந்தது. அது ஏதோ வேங்கடவன் அங்கீகாரம் அளித்தது போலிருந்தது குழுமியிருந்த அர்ச்சகர்களும் அன்னமய்யாவின் பக்தியை பாராட்டி கருவறையில் சேர்த்துக்கொண்டனர். ஓர் இரவு, திருமலையிலே வசித்து வந்த கனவிஷ்ணு என்ற துறவியின் கனவிலே பகவான் தோன்றி கருநிறம் கொண்ட அன்னமய்யாவிற்கு தாபச் சின்னங்களை பொறித்து வைணவத்தில் சேர்க்கும்படி ஆணையிட்டான். துறவியும் அவ்வாறே செய்துமுடித்தார். அன்று முதல் அன்னமய்யா, அன்னமாச்சாரியார் ஆனார்.
கோயில் வளாகத்திலே கூடிய பக்தர்கிளடையே நாளும் நல்லுரைகளை ஆற்றியும் பாடல்களை இயற்றிப் பாடியும் அன்னமய்யா காலத்தைக் கழித்தார். வீடு திரும்பாத மைந்தனை தேடி அலைந்த பெற்றோர், அன்னமய்யா திருமலையிலே

இருப்பதாக தகவல் அறிந்ததுமே, உடனே விரைந்தனர். அவனுடைய முன்னேற்றத்தைக் கேட்டறிந்து பிரமித்தும் போயினர். பெற்றோருடன் ஊருக்குத்திரும்பி வேஙுகடவனின் நினைவாகவே கீர்த்தனைகளை இயற்றி பகவானுக்கு அர்ப்ப ணித்து வந்தார்.

அன்றைய வழக்கப்படி அக்கலம்மா, திம்மக்கா என்ற இரு மஙுகையரை அன்னமய்யா திருமணம் செய்து கொண்டு இல்லற வாழ்க்கையைத் தொடஙு கினார். மனைவிகளுடன் அஹோபிலம் எனும் சிஙுகவேள் குன்றத்திற்கு புனித பயணம் மேற் கொண்டார். அப்போது அஙுகு புதிதாக நிறுவப் பட்ட மடத்தின் அதிபதியான ஆதிவண்சட கோபயதி என்பவர் அறிமுகமானுர். துறவியின் அருளுக்குப் பாத்திரமானுர். சில காலம் அஙுகேயே தஙுகி யதிபதியிடம் வைணவ தருமஙுகளையும் நுட்பமான கருத்துக்களையும் கற்று சம்பிரதா யத்தை முழுமையாகத் தழுவினுர். அப்போது முப்பத்தி அட்சரஙுகளை அடக்கிய உக்ரம் வீரம் மஹாவிஷ்ணும் ஜ்வலந்தம் ஸர்வதோ முகம் ந்ருஸிம்ஹம் பீஷணம் பத்ரம் ம்ருத்யோர் ம்ருத்யும் நமாம்யஹம் எனும் நரசிம்ம மந்திரத்தை குரு உபதேசமாகப் பெற்றுர், தொடர்ந்து உச்சாடனத்தை உபாசனை செய்தார். சாதனை புரிய புதிய இல க்கை நிர்ணயித்தார். அதுவே மந்திரத்தின் ஒவ்வெ ாரு எழுத்திற்கும் ஆயிரம் பாடல்கள் வீதம், முப்பத்தி இரண்டு எழுத்திற்கும் ஆயிரம் பாடல்கள் வீதம், முப்பத்தி இரண்டு எழுத்துக்களுக்கும் சேர் த்து மொத்தம் முப்பத்தி இரண்டாயிரம் கீர்த்தனை களை வேஙுகடவனின் பால்பாட உறுதி கொண் டார். மேலும் ஆசானின் அருளாசியிலே வேத மந்திரஙுகளையும், வேதாந்த கருத்துக்களையும், இதிகாச புராணஙுகளையும் குறிப்பாக பகவத் கீதையையும், ஆழ்வார்களின் பிரபந்தஙுகளையும் ஆச்சார்ய புருஷர்களின் கிரந்தஙுகளையும் கரைத் துக்குடித்தார். இவையே அவருடைய கீர்த்தனை களுக்குரிய ஆதாரப்பொருளானது.

அன்னமய்யாவிற்கு அக்கலம்மாவின் வாயிலாக பெத்த திருமலாச்சாரியார் பிறந்தார். பல அரிய கீர்த்தனைகளை இயற்றிய பெருமை அவரையும் சாரும். பின்னர் சின்ன திருமலாச்சாரியார் என்றெரு பேரனும் பிறந்தார். அவரும் கவியுள்ளம் படைத் தவரே. இந்தமூவரும் தாள்ளபாக மும்மூர்த்தி களாகத் திகழ்ந்தனர். திம்மக்கா. சுபத்திரா கல்யா ணம் எனும் நூலை எழுதி முதல் தெலுஙுகு பெண் கவி என்ற பட்டத்தை பெற்றுர். அன்னமய்யாவிற்கு இவர் ம்லமாக நரசிஙுகண்ணு என்றெரு மகன் பிறந் ததாகத் தெரிகிறது. மற்றும் ஒரு பேரனு சின்ன ன்ஙு என்ற சின்ன திருவேஙுகடநாதா எழுதிய அன்னமய்யா சரித்ரமு வாயிலாகவே நாம் அன்ன மய்யாவின் வாழ்க்கையைப் பற்றி அறிய முடிகிறது. டாஙுகுடூரை பரிபாலித்து வந்த சாளுவ நரசிம்மன் எனும் சிற்றரசன் அன்னமய்யாவைப் பற்றி கேள் வியுற்று அவரைக் காணவிழைந்தார். தக்க பரிசுக ளுடன் சென்று பக்தகவியை சந்தித்து கௌ ரவித்தார். ஆடம்பரம் இல்லாத எளிய வாழ்க் கையை நடத்திய அன்னமய்யாவிற்கு அனைத்தும் பகட்டாகத்தோன்றியது. மேலும் அரண்மனை யிலேயே தஙுகி நல்லுபதேசம் செய்து சமஸ்